1972 பிப்ரவரி 1]

தமிழ்நாடு உழவர்கள் குழு

* 251 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விடையளிப்பாரா—

தமிழக விவசாயிகள் குழு ஒன்றைப் பிற மாநிலங்களின் விவசாயப் பணிகளை அறிந்து வருவதற்காக அனுப்பி வைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.

Building for Training School for Women at Vellore

* 216 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government have undertaken the construction of a two storeyed building in the Government Training School for Women at Vellore; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) ஆம். கட்டடம் கட்டுவதற்கான செலவிற்காக ரூ. 2.60 லட்சம் 1969-ஆம் ஆண்டில் நவம்பர் மாதத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. கட்டடம் கட்டப்பட்டு வேலூர் அரசினர் மகளிர் இடைநிலை பயிற்சி தலைமை ஆசிரியைக்கு பொது மராமத்துத்துறையினரால் 28—4—71-ல் ஒப்படைக்கப்பட்டது. இதன்மூலம் பதினாறு வகுப்புகள் நடத்த கூடுதலான வசதி அளிக்கப்பட்டுள்ளது.

மாயூரத்திலுள்ள ஏ. வி. சி. கல்லூரிக்கு மானியம்

* 217 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971-72-ம் கல்வி ஆண்டில் மாயூரம் ஏ.வி.சி. கல்லூரி அரசினரிடம் கோரியுள்ள மானியத்தொகை எவ்வளவு?

(இ) கடன் தொகை எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 1970-71-ம் ஆண்டுக்கான கல்வி மானிய முன்பணமாக ரூ. 1,08,300. புகுமுக வகுப்பு சம்பள ஈட்டு மானியம் 1971-72 (இரண்டு தவணைகளுக்கு) முன்பணமாக ரூ. 81,000. ஆக மொத்தம் ரூ. 1,92,300 கொடுக்கப்பட்டிருக்கிறது.

(இ) கடன் கேட்டு எவ்வித விண்ணப்பமும் வரவில்லை.